[1978 மார்ச்]

திரு. எம்.ஏ. ஜெயவேலு: இதுபோல் பல பஞ்சாயத்துக்களில் ப்ரஷர் டாங்க்ஸ் பழுதடைந்திருக்கின்றன. தண்ணீர் எடுக்கமுடிய வில்லை. பல ஆண்டுகளாக அது சரிசெய்யப்படாமலிருக்கிறது. அங்கு தண்ணீர் எடுக்கமுடியாத நிலை இருக்கிறது. Water water everywhere but not a droy to drink என்று சொல்வர்கள். அது போல் இருக்கிறது. தண்ணீர் எடுக்கமுடியாத ஒரு நிலை இருக் கிறது. அதைப் போக்க காட்டிகரி 1 ல் அதைச் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: If there is water everywhere that means flood and cyclone. இருந் தாலும் மெயின்டனன்ஸ் என்பது அந்தந்தப் பஞ்சாயத் துக்களும், முனிசிப்பாலிட்டிகளும் கவனித்துக் கொள்ளக்கூடியது. அதைப்பற்றி அவர்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்று அரசுக்கு முறையீடு வந்தால் அதைப் பற்றி அரசு கவனிக்கும்.

Industrial disputes in T. V. S. Units at Padi

* 633 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether the required notice under the Industrial Disputes Act was given by the managements of the Clayton (T V.S.) and T. V. S. Lucas, while declaring the second lockout ;

(b) whether it was a legal or illegal lockout ; and

(c) if illegal, the action taken by the Government to lift the lockout ?

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் :—(அ) சென்னையி லுள்ள சுந்தரம் கிளேட்டன் லிமிடெட் மற்றும் லூகாஸ் டி. வி எஸ், ஆகிய இரு நிர்வாகங்களும் கதவடைப்புக்கான அறிவிப்பைச் சட்டப்படி கொடுக்க வேண்டிய அவசியமில்லை.

(ஆ) } (இ) } கதவடைப்பு சட்ட பூர்வமானதா அல்லது சட்டத் திற்குப் புறம்பானதா என்பதை தொழில் நீதி மன்றம்தான் தீர்மானிக்க வேண்டும்.

1978 மார்ச் 20]

திரு. ரா. உமாநாத் : சட்டப்படியானதா இல்லையா என்று அரசாங்கம் சொல்வதற்கில்லை என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எனது கேள்வி, 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டதா என்பதாகும். இன்டஸ்டிரியல் டிஸ்ப்யூட்ஸ் ஆக்ட்படி 14 நாள் நோட்டீஸ் லாக் அவுட் என்றால் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அது கொடுக்கப்பட்டதா என்பது என் கேள்வி. இங்கே சொல்வதற்கில்லை என்றால்—அன்று கூட டிரான்ஸ்போர்ட் மினிஸ்டர் ஒரு ஸ்ட்ரைக்கைப்பற்றிச் சொல்லும்போது இல்லீகல் ஸ்டிரைக் என்று சொல்லி ஸ்டேட்மென்ட் வந்திருக்கிறது. அமைச்சர் அவர்கள்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த வினாவிற்கும் சேர்த்து பதிலை அளித்துவிட்டால் தாங்கள் கேட்பதற்கு உதவியாகஇருக்கும்

* 634 Q.—Thiru R. UMANATH : Will the Hon. the Minister for Labour be pleased to state —

(a) whether it is a fact that the managements of Clayton-Lucas (T. V. S.) made the signing of individual undertaking by workmen as a pre-condition to admitting them to work after lifting the second lock-out ;

(b) whether the terms contained in the undertaking did not unilaterally modify the terms of the agreement signed by them in the presence of the Transport Minister ; and

(c) if so, the action taken by the Government to prevent this violation ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) சுந்தரம் கிளேட்டன் மற்றும் லூகாஸ் டி. வி. எஸ், ஆகிய நிறுவனத்தார் 29-9-77 முதல் இரண்டாவது கதவடைப்பை நீக்கி தொழிலாளர்களிடமிருந்து தனித்தனியாக எழுத்து மூலமாக உறுதி மொழி பெற்றுக் கொண்டு அவர்களை வேலைக்கு அனுமதித்தனர்.

(ஆ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ரா. உமாநாத் : 14 நாட்கள் நோட்டீஸ் கொடுக்கப்பட்டுள்ளதா இல்லையா என்று சொல்லுங்கள். குறிப்பிட்ட லாக் அவுட் லீகலா இல்லீகலா என்று சொல்லுங்கள். இதைப்பொறுத்தவரையில் ஸெட்டிலாகி உள்ளே போன பிறகு பர்னிச்சர்ஸ் அன்ட் ஃபிக்சர்ஸ் சிலபேர்கள் வெளியே கொண்டு வந்து டிஸ்ப்யூட்டாகி டி. ஸி, எல். ஸ்பாட்டில் போய் அன்லோட் செய்து தீர்க்கப்பட்டது. மண்டே மூடப்பட்டிருக்கிறது. இந்த 14 நாள் நோட்டீஸ் கொடுக்கப்படவில்லை என்பது உண்மையா? அப்படியானால் அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?